# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 12 இதழ் : 04 ஏப்ரல் 2026 தனிபிரதி – ரூ.20/– ஆண்டு சந்தா ரூ.200/–
Vol : 12 Issue No : 04 April 2026 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-



Ministry of Jesus
Available Now



# பரலோகமே என் சொந்தமே

Dr. Ananda Stira

# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை

### Dr. ஜேன் ஜாஷ்வா



சகல நாட்களிலும் உயிரோடிக்கிற நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். இந்த வருடத்தின் துவக்கத்தில் கர்த்தர் சொன்னது போலவே இந்த நாட்களில் பயங்கரமான யுத்தங்களும், ஆபத்துகளும் நம்மை சூழ்ந்திருக்கின்றன. இருப்பினும் நாம் அசைக்கப்படாமல், உறுதியாயிருக்கும்படி கர்த்தர் நம்மை பாதுகாக்கிறார். அவர் சிலுவையில் மரித்த பொழுது சீஷர்களுக்கு ஒரு எதிர்காலமே இல்லாத ஒரு சூழ்நிலையாக இருந்தது. வெறுமையான கல்லறையை சீஷர்கள் பார்த்தபொழுதும்கூட இயேசு உயிரோடு எழுந்துவிட்டார் என்று அவர்கள் அறியாதிருந்தார்கள். **அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்கிற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள். (யோவான் 20:9)** அதன்பிறகு இயேசுவே சீஷர்களுக்கு நேரில் காட்சியளித்தப்பொழுதும் சந்தேகத்துடன் இருந்தார்கள். இவ்வாறு நாமும் பல சமயங்களில் இயேசு ஜீவிக்கிறார் என்பதை மறந்து பயந்துக் கொண்டிருக்கிறோம், சந்தேகப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். சோர்ந்து போகாதீர்கள். சர்வ வல்லவர் உயிரோடிருக்கிறார், அவர் நம்மையும் நேசிக்கிறார். நமக்காக அற்புதங்களையும் செய்ய வல்லவராயிருக்கிறார்.

கடந்த மார்ச் மாதம் எங்கள் அப்பாவின் பிறந்த நாளை சிறப்பிக்க கர்த்தர் உதவி செய்தார். அத்துடன் நாகர்கோவிலில் நடைபெற்ற தனி ஜெபம் மற்றும் திருச்சி குடும்ப ஆசீர்வாதக்


ஆசிரியர்/வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

| சந்தா விபரம் | இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/– ஆயுள் சந்தா ரூ.2000/–<br>வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/– ஆயுள் சந்தா ரூ.15000/– |
|---|---|

காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627
தெலுங்கு: +91 9944536343
மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org
Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

கூட்டங்கள் அனைத்தும் நன்றாக நடந்து முடிய கர்த்தர் தயை செய்தார். அதற்காகவும் கர்த்தரை துதிக்கிறேன்.

இந்த மாதம் ஆந்திரா, சென்னை மற்றும் திருச்சியில் நடைபெறப்போகிற கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். ஆந்திரா கூட்டத்தை நடத்துவதற்கு இலட்சக்கணக்கில் பணம் தேவைப்படுகிறது. அந்த தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். நீங்களும் தாங்குங்கள்.

எங்கள் அனைவருடைய செய்திகள், பாடல்கள் அனைத்தையும் நமது Ministry of Jesus youtube சேனலில் பார்த்து பயன்பெறுங்கள். அநேகருக்கு share செய்யுங்கள்.

இந்த மாதம் நடைபெறயிருக்கிற சட்டமன்ற தேர்தலுக்காகவும் ஜெபியுங்கள். கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பை தரக்கூடிய அரசாங்கம் அமைய ஜெபியுங்கள்.

எங்கள் அப்பாவின் நல்ல ஆரோக்கியத்திற்காக தொடர்ந்து ஊக்கமாக ஜெபியுங்கள். அம்மாவின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருக்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து காப்பாராக!

**கிறிஸ்துவின் பணியில்**
**Dr. ஜேன் ஜாஷ்வா**
jane@mojindia.org




## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org
www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in



# உயிர்த்தெழுதல்

தேவ செய்தி :Dr.ஜேன் ஜாஷ்வா

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, என்றென்றும் ஜீவித்திருக்கிறவராகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய உயிர்ப்பிக்கும் வல்லமையினால் உங்களை நிரப்பி ஆசீர்வதிப்பாராக!**

இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் ஒவ்வொரு வருடமும் நாம் ஆசரிக்கின்றோம். கிறிஸ்துவின் பிறப்பு, கிறிஸ்துவின் சிலுவை மரணம், எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதற்கு அதிகமாக கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலும் முக்கியமானதாக, மகிமையானதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். சிலுவை மரணமானது ரோம சாம்ராஜ்யத்தின் கொடூரமான ஒரு தண்டனையாக இருந்தது. நமக்கு ஒரு வேளை அது சமுதாய அநீதியாக தோன்றினாலும், அக்காலங்களில் மக்களை ஒடுக்குவதற்கு அரசர்களும், ஆளுகைகளும் கைக்கொண்ட முறைதான் சிலுவை மரணம். வேதத்தில் சிலுவை மரணத்தைக் குறித்து விளக்கமான விரிவுரைகள் காணப்படவில்லை என்றாலும், பரிசேயர்கள் இயேசுவை பொறாமையினால் ஒப்புக்கொடுத்தார்கள் **(மத்தேயு 27:17) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.** மதத்தலைவர்களுடைய மதவெறியின் உச்சக்கட்ட செயலாய் இது இருந்தது.

இயேசு பாவமே செய்யாதவராய் இருப்பினும் பாவமாக சிலுவையில் தொங்கினார். அவர் நம்முடைய சாபங்களையும் வெட்கத்தையும் நம்முடைய எல்லா இயலாமைகளையும் சிலுவையில் ஏற்றுக்கொண்டு மரித்தார். அவர் சரீரம் அடக்கம் பண்ணப்பட்டபொழுது அவருடைய ஊழியமும் வார்த்தைகளும் அவருடைய வாழ்கையின் நோக்கமும் அன்றோடு முடிந்துவிட்டது என்று அனைவரும் நினைத்தனர். அவருடைய சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டு ஒரு பெரிய கல் புரட்டப்பட்டது. அந்த கல் கல்லறையை மூடினது மாத்திரமல்ல, இயேசுவின் பெயரையும், ஞாபகத்தையும் முற்றிலும் மறைத்துப்போடும் என்றே அவர்கள் நினைத்தனர். ஆனால் அவர்களுடைய கூற்றும், எதிர்பார்ப்பும் முழுவதும் தவறானது. இயேசு

மூன்றாம் நாள் மகிமையாய் உயிர்த்தெழுந்தார். இந்த உயிர்த்தெழுதல் அவர்கள் முடிக்க நினைத்ததையும் மகிமையாய் திரும்ப துவங்க செய்தது. ஆம், இயேசுவின் உயிர்த்தெழுதல் நமக்கு அநேக ஆசீர்வாதங்களை பெற்றுத் தருகின்றது. அதில் ஒரு சிலவற்றை மாத்திரம் நாம் இந்த செய்தியில் பார்க்க போகிறோம்.

## அவர் சொன்ன வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார்

**அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். மத்தேயு 28:6-ன்படி** இயேசு தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். அவர் என்ன சொன்னார்? **மத்தேயு 16:21 மத்தேயு 17:23 லூக்கா 9:22 லூக்கா 18:33** ஆகிய வசனங்களில் இயேசு தாம் பாடுபட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் பல சமயங்களில் கூறியுள்ளார். சீஷர்கள் தான் இயேசு சொன்னதின் அர்த்தத்தை புரிந்துக் கொள்ளவில்லை. வேத வாக்கியங்களும் அவருடைய மரணத்தை குறித்தும் உயிர்த்தெழுதலைக் குறித்தும் மிக தெளிவாக கூறியிருக்கிறது. **யோவான் 20:9-**ல் நாம் பார்க்கிறபடி சீஷர்களுக்கு இந்த வேதவாக்கியங்களின் உண்மையான அர்த்தம் புரியாமல் இருந்தது. ஆம், பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து தாம் உயிர்த்தெழுந்தின் நிமித்தம் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றினார்.

**யோவான் 2:19,20,21-ல்** 'இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்' என்று அவர் தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். இது எப்படி சாத்தியமாகும் என்று நீங்கள் கேட்கலாம். வேதம் சொல்கிறது. அவருடைய ஜீவனை ஒருவரும் அவரிடத்திலிருந்து பறித்துக்கொள்ள முடியாது. **யோவான். 10:17-18** இந்த வசனங்களில் நாம் பார்க்கிறபடி அவரே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார், அவரே திரும்பவும் பெற்றுக் கொண்டார். அதன்படி ஜீவாதிபதியாகிய அவர் **(அப்போஸ்தலர் 3:15)** தம்முடைய ஜீவனை தாமே நமக்காக ஈந்தார். அந்த ஜீவன் பரிபூரணப் படத்தக்கவிதமாய் மரணத்தையும் கடந்து மரித்தோரிலிருந்து எழுந்தார். **கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். 1கொரி.15:20. 1பேதுரு 1:23ல்** அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஜீவனுள்ளது. எனவே தான் அவருடைய வாக்குத்தத்தங்களும், வார்த்தைகளும் ஒரு நாளும் அழிந்து போகாது என்று கூறுகிறோம். இயேசுவே தம்முடைய சீஷர்களிடத்தில் **'வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை என மத்தேயு 24:35-ல்** கூறியிருக்கிறார். அவர் மாறாதவராகையால் அவர் வார்த்தைகளும் மாறாது. அவர் சொன்னபடியே செய்து முடித்து தீருவார். ஒருவனும் அதை மாற்றவும் முடியாது. ஏன் இதை செய்கிறீர் என கேட்கவும் முடியாது.

**2கொரி.1:20-ல் எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே** என வேதம் சொல்கிறது.

ஆம், இயேசு கிறிஸ்துவே அவருடைய வாக்குத்தத்தங்களுக்கு உத்தரவாதமாய், அச்சாரமாய் இருக்கிறார். அவர் என்றென்றும் ஜீவித்திருக்கிறவர் ஒருநாளும் மாறாதவர் எனவே அவருடைய வாக்குத்தத்தங்கள் அவருக்குள் உத்திரவாதம் பெற்று நிறைவேறுகின்றன. வேதம் கூறுகிறபடி வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். அவர் சொல்வதில் தவறமாட்டார். நிறைவேற்றுவதில் தயங்கமாட்டார். மனிதர்கள் அவருடைய வாக்குகளில் இன்று ஒன்றும், நாளை ஒன்றும் என மாற்றிக்கொண்டே இருப்பார்கள்.

ஆனால் இயேசு கிறிஸ்துவோ என்றென்றும் எப்பொழுதும் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறவராக இருக்கிறார். சீஷர்களைப் போல் நாமும் இது எப்படி ஆகும்? என்று பல நேரங்களில் அறியாமல் திகைத்து கொண்டிருக்கின்றோம். சோர்ந்து போகாதீர்கள். தம்முடைய மரணத்திற்கு முன்பே தம்முடைய உயிர்த்தெழுதலை பற்றி சீஷர்களுக்கு சொல்லி, அதை நிறைவேற்றின தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிற வாக்குத்தத்தங்களை நிறைவேற்றாமல் போவாரோ?

ஆபிரகாமைப்போல வாக்குத்தத்தம் பண்ணினவரை விசுவாசிப்போம். **எபி.6:13-ல் ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாத படியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு,** என எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு வாக்குத்தத்தத்தை தேவன் தாமே உறுதி செய்தார். தம்முடைய வாக்குத்தத்தங்களை ஆண்டவர் நிறைவேற்றும் பொழுது அநேக சமயங்களில் ஆபிரகாமின் வாழ்க்கையில் நடந்ததுபோல நமக்கும் நடக்கலாம். ஆபிரகாமுக்கு எழுபத்தைந்து வயதாக இருந்தப்பொழுது ஆண்டவர் குழந்தையை தருவேன் என வாக்குத்தத்தம் பண்ணிவிட்டார். ஆனால் அவருக்கு நூறு வயது ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. இதற்கிடையில் தேவனிடம் ஆபிரகாம், 'நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே, தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே, தேவரீர் எனக்கு குழந்தையை அருளவில்லையே, இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளைதான் எனக்குச் சுதந்தரவாளியாய் இருப்பானோ?' என கெஞ்சுகிறான். அத்துடன் சூழ்நிலைகள் அவனை சோர்ந்துபோகும்படி செய்கிறது. ஏனென்றால் அவனுக்கு எதிரிகள் பலர் இருந்தனர். ராஜாக்கள் அவனுக்கு விரோதமாக இருந்தனர். அத்துடன் அவன் வயதும் கூடிக்கொண்டே இருந்தது. இவ்வாறு நம்முடைய வாழ்க்கையிலும் கர்த்தர் வாக்குத்தத்தம் கொடுத்திருந்தால் சூழ்நிலைகள் அதற்கு எதிர்மாறாகவே இருந்து நம்மை வேதனைப்படுத்தும்.

அடுத்ததாக சாராளுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணினதை அவள் அறிந்திருந்தும், நமக்கு குமாரன் இல்லையே என அவசரப்பட்டு தன் அடிமைப் பெண்ணாகிய ஆகாரை ஆபிரகாமுக்கு மனைவியாக கொடுக்கிறாள். இவ்வாறு நாமும் பல சமயங்களில் வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தரை மறந்து, சந்தேகத்திற்கு இடம் கொடுத்து விடுகிறோம். அதனால் நம்பிக்கையை இழந்து விடுகிறோம். சாராளுடைய அவசரத்தினிமித்தம் இஸ்மவேல் பிறந்தான். இருப்பினும் ஆண்டவர் ஆபிரகாமின் நிமித்தம் இஸ்மவேலையும் ஆசீர்வதிக்கிறார். அத்துடன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை ஆண்டவர் மறக்காமல், அவனுக்கு ஈசாக்கை கொடுத்தார். நாமும் ஆண்டவரிடம் சில காரியங்களை கேட்டிருப்போம். அவை தாமதம் ஆகிறது என்றால் உடனே எனக்கு அவை நடக்குமா என சந்தேகப்படுகிறோம்.

ஆம் பிரியமானவர்களே, திருமணம் ஆகி பல ஆண்டுகளாக குழந்தை இல்லாமல் இருக்கிறீர்களா? அல்லது கர்த்தரிடமிருந்து ஒரு அற்புதத்தை எதிர்பார்த்து கொண்டு இருக்கிறீர்களா? உங்களுடைய சூழ்நிலைகளோ, பயங்களோ, சந்தேகங்களோ கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை மாற்ற முடியாது. கர்த்தருடைய வழியைவிட்டு பின்வாங்கும் பொழுதுதான் அந்த வாக்குத்தத்தம் மாறும். ஆகவே சோர்ந்து போகாமல் கர்த்தரை விசுவாசியுங்கள். அப்பொழுது கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் உங்களுக்குள் கிறிஸ்துவின் வழியாக உங்கள் வாழ்வில் நிறைவேறும்.

இப்பொழுதும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை நீங்கள் விசுவாசிக்கும்பொழுது அவர் நாமத்திலே அவர் மகிமையிலே அவை அனைத்தும் நிறைவேறுகின்றன.

# அவர் மரணத்தின் மீது ஜெயம் எடுத்தார்

ஆதாம், ஏவாள் பாவம் செய்த நாளிலிருந்தே மரணம் நம்மை ஆட்கொண்டது. நன்மை தீமை அறியத்தக்க கனியை புசித்த ஆதாமும், ஏவாளும் ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்காதபடி தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தை விட்டு அனுப்பி விடுகிறார். **ஆதியாகமம் 2:22-23** மற்றும் **ஆதியாகமம் 3:3-ன்படி** மரணம் ஆதாமையும் அவன் சந்ததியையும் ஆட்கொண்டது. அந்நாளிலிருந்து ஒரு மனிதனாலும் மரணத்தை தடுக்கவும் முடியாது, ஜெயிக்கவும் முடியாது. இது உண்மையா? என நீங்கள் யோசிக்கலாம். நான் என் உடலை நன்றாக பேணிகாத்து வந்தால், நான் என்றும் வாழமுடியும் என நினைக்காதீர்கள். அது தவறானது. தேவன் ஒருவரே நமக்கு சுகத்தையும், பெலனையும், நீண்ட ஆயுசையும் கொடுக்க வல்லவர். அவருடைய நித்திய நியமத்தின்படியே எல்லா மனிதருக்கும் ஒரே தரம் மரிப்பதும் ஒரே தரம் உயிர்த்தெழுதலும் என ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. **(எபி.9:27)**

மரண பயம் எப்பொழுதும் யாரையும் விட்டுவிடுவதில்லை. மரண பயம் அந்தஸ்து, சூழ்நிலைகள் பார்த்து வருவதில்லை. இதைக் குறித்து வேடிக்கையான கதை ஒன்று உண்டு. ஒரு ராஜாவுக்கு ஒரு மந்திரி இருந்தார். அந்த மந்திரி ராஜாவுக்கு துணையாக எப்பொழுதும் ராஜாவுடன் இருப்பார். அந்த ராஜா எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் அந்த மந்திரியை முன்வைத்து தான் செய்வார். ஒரு இடத்திற்கு போவதாக இருந்தாலும் அந்த மந்திரியை அழைத்துக்கொண்டுதான் செல்வார். ஒரு கட்டளையை கொடுப்பதாக இருந்தாலும் அந்த மந்திரியை ஆலோசித்து விட்டுதான் அந்த கட்டளையை கொடுப்பார். ஒரு நாள் திடீரென அந்த ராஜா சுகவீனம் அடைந்துவிட்டார். பல மருத்துவர்கள் வந்து பார்த்துவிட்டு இனி ராஜா பிழைக்கமாட்டார் என சொல்லிவிட்டனர். உடனே ராஜா அந்த மந்திரியை அழைத்தார். மந்திரி ராஜாவின் அருகில் வந்து, 'ராஜாவே நீங்கள் கவலைப்பட வேண்டாம், நீங்கள் பிழைப்பதற்கு எந்த நாட்டிற்கு சென்றாவது நான் மருந்தை கண்டுபிடித்து கொண்டு வருகிறேன்' என்றான். அதற்கு ராஜா மந்திரியை நோக்கி, 'அதெல்லாம் வேண்டாம். நான் மரித்துவிடுவேன் என அரண்மனை மருத்துவர்கள் எல்லாம் கூறிவிட்டார்கள். நான் இறந்தபிறகு எங்கு செல்வேன், என்ன ஆகும் என எனக்கு தெரியவில்லை. ஆகவே நீர் எனக்கு முன்பாக சென்று அந்த இடத்தைக் குறித்து அறிந்து வா என்றாராம். இதைக் கேட்கும்பொழுது நமக்கு சிரிப்பு வரலாம். அந்த மந்திரிக்கு எப்படி இருந்திருக்கும் என யோசித்துப்பாருங்கள். ஆம், ஒரு ராஜாவுக்கும் மரணத்தை குறித்த பயம் இருக்கத்தான் செய்கிறது. பணக்காரனோ, ஏழையோ, படித்தவனோ, படிக்காதவனோ, எந்த மார்க்கத்தை சேர்ந்தவர் யாராக இருந்தாலும் மரண பயம் என்பது பொதுவானதாக இருக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்கோ மரணத்தின் மீது அதிகாரமும் ஜெயமும் தான் இருக்கிறது. மரண பயம் என்பது இல்லை. **மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? 1கொரி.15:55**

**சங்கீதம்49:7-8ல்** நாம் பார்க்கிறபடி ஒருவனாலும் என்றென்றும் உயிரோடிருக்கும்படி மீட்கும் பொருளை தேவனுக்கு கொடுக்க முடியாது. ஆனால் இயேசுவோ தம் மரணத்தின் வாயிலாக மரணத்தின் மீது வெற்றி சிறந்தார். கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினிமித்தம் நித்திய ஜீவன் நமக்கு உண்டாயிற்று. கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினிமித்தம் நாமும் அழிவிலிருந்து அழியாமைக்கு மறுரூபப்படுகிறோம். இயேசு கிறிஸ்துவை தவிர

ஒருவராலும் ஜீவனை கொடுக்கவும், ஜீவனை எடுக்கவும் முடியாது என்பதை இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலின் மூலம் அவர் நிரூபித்தார். **எபிரேயர் 2:14-15ல்** பார்க்கிறபடி மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசை இயேசு தம்முடைய மரணத்தினால் அழித்தார், மரண பயத்தை நீக்கினார். நாமும் மரணத்தின் மீது ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருக்கும்படி அவர் மரணத்தை ஜெயித்தார். **ஏசாயா 25:8ல்** ஏசாயா தீர்க்கதரிசி கூறுகிறார், 'அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்.' என்று அதே வார்த்தை **1கொரிந்தியர் 15:54-ல்** 'மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது.' என்று சொல்லப்பட்டது. இனி மேல் மரணத்திற்கு நாம் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. மிருகங்களை போல நாமும் மரித்து மண்ணோடு மண்ணாக போய்விடுவோம் என நினைக்க வேண்டாம், அல்லது பிசாசை போல என்றும் நரகத்திலே தள்ளப்படுவோம் என நினைக்கவும் வேண்டாம்.. நாம் இயேசுவை போல மகிமையானவர்களாக என்றும் ஜீவித்திருக்கிறவர்களாக பரலோகத்தை சுதந்தரிக்க தக்கவர்களாய் வாழுவோம். யோவான் 11:25-26 சொல்கிறது. **நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான், உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்.**

ஆம், பிரியமானவர்களே, உலகத்தில் சரீர பிரகாரமாக நாம் மரித்துப்போனாலும் நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவுக்குள் என்றென்றும் வாழும்படியாக அவர் நமக்கு வழியை திறந்திருக்கிறார். நித்திய வாழ்வு என்னும் சுதந்திரத்தை தந்தார். இந்த சுதந்திரத்தை பெறும்படியாக முயற்சியுங்கள். மரணத்தை கண்டு பயந்துபோகாதீர்கள். நான் மரித்து விட்டால் என்ன செய்வேன் என்று யோசிக்காதீர்கள். இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்து உயிரோடு எழுந்தவர். அவர் உங்கள் பக்கம் இருக்கும்பொழுது, அவருடைய ஜீவன் உங்களுக்குள் இருக்கும்பொழுது நீங்கள் ஒருபோதும் அழிந்து போகவேமாட்டீர்கள்.

# சகல அதிகாரத்தையும் நமக்கு கொடுக்கிறது!

**அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்தேயு 28:18**

பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவைக் குறித்து நினைக்கும்பொழுது ஒரு நாளும் அவர் மனிதன் என்றோ, சிறு குழந்தை என்றோ நினையாதிருங்கள். ஏனென்றால் அவர் சகலத்தையும் ஆளுகிற சர்வ வல்ல தேவன். **யோபு 25:2 சொல்கிறது "அதிகாரமும் பயங்கரமும் அவரிடத்தில் இருக்கிறது,...."** இந்த அதிகாரத்தை கர்த்தர் ஆதியாகமத்தில் ஆதாமுக்கு கொடுத்தார். ஆனால் அவன் பாவத்தினிமித்தம் எல்லா அதிகாரத்தையும் இழந்தவன் ஆனான். பிறகு நோவாவின் காலத்தில் தேவன் அனைத்து ஜீவ ஜந்துக்களையும் மனிதனுடைய அதிகாரத்தின் கீழ் ஒப்புக்கொடுத்தார். **(ஆதி.9:2-3)** இருப்பினும் மனிதனை தேடி வருகின்ற பிரச்சனைகள், சக மனிதர்களின் மூலமாக வருகின்ற உபத்திரவங்கள், பிசாசின் மூலம் வருகின்ற போராட்டங்கள் என இவற்றையெல்லாம் மேற்கொள்ள மனிதனுக்கு அதிகாரமில்லை. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோ இந்த அதிகாரத்தை நமக்கு மீட்டு தந்தது. ஏனெனில் அவர் சிலுவையில் சகலவற்றின்மீதும் வெற்றி சிறந்தார். **நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி**

**சிறந்தார். கொலோ.2:14-15**

ஆதாம் ஏவாள் செய்த பாவத்தின் நிமித்தம் பிசாசிற்கு நம்மேல் அதிகாரம் உண்டாயிற்று. இழந்த அதிகாரத்தை இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு திரும்ப பெற்றுத்தந்தது. உலகத்தில் வேறு எவருக்கும் இந்த அதிகாரம் கெடுக்கப்படவில்லை. பிசாசிற்கும் இந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை. இயேசு தாமே அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு இந்த அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். இயேசு தாம் உயிரோடு இருந்த நாட்களில் தம்முடைய சீஷர்களுக்கு இந்த அதிகாரத்தை கொடுத்தார் என **மத்தேயு 10:1 மாற்கு 3:15-ல்** பார்க்கிறோம். இந்த அதிகாரம் நமக்கு எதற்காக கொடுக்கப்பட்டது? நாமும் அவரைப்போல ஜெயமுள்ள வாழ்க்கை வாழ்வதற்காக இயேசு நமக்கு இந்த அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். ஒரு அடிமைக்கு கொடுக்கப்படுகிற அதிகாரம் நமக்கு தரவில்லை. அதற்கு எதிர்மாறாக ஒரு மகனுக்கு கொடுக்க வேண்டிய அதிகாரம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. **நீங்கள் புத்திரரா யிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். கலாத்தியர் 4:6-ல்** பார்க்கிறபடி அவருக்குள் பரிசுத்த ஆவியானவரின் மூலம் நாம் புத்திர சுவீகாரத்தை பெற்றுக்கொள்ளுகிறோம் இயேசுவைப் போல நாமும் தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்படுகிறோம். எனவே அவருடைய முழு அதிகாரம் அவருடைய நாமத்திலே பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்குள் செயல்படுகிறது. பிலாத்து இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுக்கப்படும் முன்பாக அவரிடத்தில் கேள்வி மேல் கேள்வி கேட்கிறான். **அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகார முண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது, ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார். அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகைதேடினான். யோவான் 19:10-12 ல்** வாசிக்கிறோம்.

பிலாத்து எல்லா அதிகாரமும் உடைய வனாய் இருந்தான். அதனால் இயேசு கிறிஸ் துவை பார்த்தவுடன் அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. இவர் அமைதியாக இருக்கிறாரே, என் அதிகாரத்தை குறித்து இவர் அறிந்திருக்க வில்லையோ என எண்ணி, இயேசுவிடம், ‘உன்னை விடுதலை பண்ணவும், சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டென்பது உனக்கு தெரியாதா?’ என கேள்வி கேட்கிறான். அதற்கு இயேசு, “பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என் மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது என பதில் சொல்லுகிறார்.

பிரியமானவர்களே, இயேசு சிலுவையின் மரணத்தின் போதும் அதிகாரத்தை உடைய வராகவே இருந்தார். அதனால் பிலிப்பியர் 2:8-ல் பார்க்கிறோம். **அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவை யின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.** ஆம் இயேசு சிலுவை மரணத்திற்கு நேராய் போகும்பொழுது, அவர் அடிமையின் கோலம் எடுத்து, சகல அதிகாரத்தையும் தன்னுடைய கட்டுக்குள் வைத்து, மரணத்தை பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறார். அப்படியென்றால் சிலுவை மரணத்திற்கு முன் அவருக்கு எந்த அதிகாரமும் இல்லையா என்ற கேள்வி உங்களுக்கு வரலாம். யோவான் 1:3-ல் **சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை** என எழுதப்பட்டுள்ளது. சகலமும் அவர் மூலமாய் உண்டானது என்ற அதிகாரத்தை உடையவராக இயேசு இருந்தாலும், அவர் சகல அதிகாரத்தையும் சிலுவை மரணத்தின்போது விட்டுக்கொடுத்தார். அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் சகல

அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டவராகவும் இருக்கிறார். நாமும் அந்த அதிகாரத்தை பெற்றுக்கொள்ளுகிறவர்களாக மாற்றினார். அதனால் தான் பிலாத்திடம் இயேசு சொன் னார், “பரத்திலிருந்து உமக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.” உம்மாலே என்னை எதுவும் செய்யமுடியாது என்கிறார்.

பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கை யில் நடைபெறுகிற காரியங்கள் உங்கள் அதிகாரத்தின் கீழ் இல்லாமல் இருக்கலாம். அதை நினைத்து நீங்கள் சோர்ந்துபோயிருக்கலாம். ஒன்று மாத்திரம் புரிந்துக்கொள்ளுங்கள். இயேசு நமக்கு கட்டவும், கட்டவிழ்க்கவும் அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். பாவத்தின் மீது அதிகாரம் கொடுத்திருக்கிறார், வியாதியின் மீதும் அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். பிசாசின் மீதும் அதிகாரத்தை கொடுத்திருக்கிறார். **அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார். மாற்கு 3:14-15** இந்த அதிகாரத்தை சீஷர்கள் தங்களுடைய ஊழியத்தில் கண்டார்கள். அதை கண்டப்போது, ‘ஆண்டவரே, உம்முடைய நாமத்திலே பிசாசுகள் ஒடுகிறதே’ என ஆச்சரியப்பட்டு கூறினார்கள். அப்போஸ்தலர்களுக்கும், சீஷர்களுக்கும் இயேசு அதிகாரத்தை கொடுத்து உலகமெங்கும் சென்று சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என கட்டளையிட்டார். அவருடைய நாமத்தினால் பிசாசுகளை துரத்துவீர்கள், வியாதிகளை சுகமாக்குவீர்கள், ஞானஸ்நானம் கொடுப்பீர்கள் என்றார். ஆண்டவர் கொடுத்த அதிகாரத்தை அப்போஸ்தலர்கள் பயன்படுத்தினார்கள். இயேசு கொடுத்த அதிகாரம் நமக்கும் ஒரு பரிசாக அமைந்திருக்கிறது. ஆகவே எதற்காகவும் சோர்ந்து போகாதீர்கள். கிறிஸ்தவ வாழ்வில் நாம் ஜெயம் எடுப்பதற்காக இயேசுகிறிஸ்து சகல அதிகாரத்தையும் நமக்கு கொடுத்துள்ளார். ஆண்டவர் கொடுத்த அதிகாரத்தை தேவ நாமத்தின் மகிமைக்காகவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவும் பயன்படுத்துங்கள்.

ஆம், பிரியமானவர்களே உங்கள் வாழ்க்கையில் எத்தகைய சோர்வுகள், கஷ்டங்கள் வந்தாலும் இயேசு இன்றும் ஜீவிக்கிறார். ஆகவே இதை மேற்கொள்ள எனக்கு அதிகாரம் உண்டு என விசுவாசியுங்கள். அப்பொழுது ஜெயம் எடுப்பீர்கள்.

இந்த உயிர்த்தெழுதலின் நாட்களில் தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் பிரச்சனைகளை மேற்கொள்ளத்தக்க வல்ல மையையும், போராட்டங்களை ஜெயிப்பதற்கான அதிகாரத்தை கொடுத்து சந்தோஷப்படுத்துவாராக. இயேசு உங்கள் கண்ணீரை துடைப்பார். அவர் உங்களை மேன்மைப்படுத்துவார். அவருக்குள் சகல வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றி கொடுப்பார்.



# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

**உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது.(அப்போஸ்தலர் 10:4)**

நமது டியூஷன் சென்டரில் மாலை நேர வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அவர்களுக்கு நல்ல ஆசிரியர்களை வைத்து மாலை நேரத்தில் பாடங்கள் கற்பிக்கப்படுகிறது.

தினந்தோறும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் இரவு உணவு கொடுத்து வருகிறோம். இந்த பணிக்கு உதவி செய்கிற பங்காளர்கள் அனைவருக்கும் எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

இந்த பணிகளுக்காக ஜெபியுங்கள். தொடர்ந்து தாங்குங்கள். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!







# Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு S.J.Saves Trust டியூஷன் சென்டரில் [சேலம், நாமக்கல்] படிக்கிற மாணவ மாணவிகளின்  நடன நிகழ்ச்சிகள்











# Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் பிறந்தநாள் அன்று நடைபெற்ற ‘பரலோகமே என் சொந்தமே’ புத்தக வெளியீட்டு விழா



**புத்தகத்தின் முதல் பிரதியை** Bro.Albin David அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.



# Dr. ஆனந்த ஸ்திரா அவர்களின் பிறந்தநாள் விழா புகைப்படங்கள்









# APRIL 2026

## தினசரி வாக்குத்தத்த வசனம்

1 அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். (1பேதுரு 3:18)

2 உங்கள் பாவங்களினாலேயும், ...மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே உயிர்ப்பித்து,... (கொலோ. 2:13-15)

3 அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்: கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். (எபேசியர் 2:5)

4 ...பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். (1கொரி.15:45)

5 அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1கொரி.15:23)

6 கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற் பலனானார். (1கொரி.15:20)

7 கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8:11)

8 ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாதுஞு நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. (யோவான் 6:63)

9 கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும். (ஆபகூக்3:2)

10 அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். (எபேசியர் 2:1)

11 பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். (யோவான் 5:21)

12 தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்துபோவான்: இழந்து போகிறவன் அதை உயிர்ப்பித்துக்கொள்ளுவான். (லூக்கா 17:33)

13 .....நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன் (ஏசாயா 57:15)

14 கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும், உம்முடைய நீதியின்படி என் ஆத்துமாவை இடுக்கத்திற்கு நீங்கலாக்கிவிடும். (சங்.143:11)

15 நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர். (சங்.138:7)

# APRIL 2026

## தினசரி வாக்குத்தத்த வசனம்

16 கர்த்தாவே, உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும். (சங்.119:159)

17 உம்முடைய வார்த்தையின்படியே என்னை உயிர்ப்பியும். (சங்.119:154)

18 எங்களை உயிர்ப்பியும், அப்பொழுது உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம். (சங்.80:18)

19 கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது: (சங்.19:7)

20 கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார். (1சாமு.2:6)

21 நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்... நான் உயிர்ப்பிக்கிறேன். (உபா.32:39)

22 மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். (வெளி.1:18)

23 என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். (யோபு 19:25)

24 ...அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். (எபி.7:25)

25 மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம், மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. (ரோமர் 6:9)

26 ...மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். (1கொரி.15:54)

27 மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின்ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. (வெளி.1:5)

28 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (1கொரி.15:57)

29 மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.(1கொரி.15:21)

30 ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1கொரி.15:22)

# துதி அறிக்கை

## 9 வருடங்களுக்கு பிறகு குழந்தை பாக்கியம் அருளின அற்புதத்தின் தேவன்!



எங்களுக்கு திருமணமாகி ஒன்பது ஆண்டுகளாகியும் குழந்தை பாக்கியம் இல்லாமல் அதிக துயரத்தில் இருந்தோம். அதற்காக பல மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டோம். பயன் எதுவும் இல்லை. சமுதாயத்தில் பல அவமானங்களை சந்திக்க நேரிட்டது. இதனால் ஒவ்வொரு நாளும் மனதளவில் மிகவும் கலங்கிப் போயிருந் தோம். இந்நிலையில் சகோதரர் அவர்கள் நடத்தும் அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்து சென்றேன். கர்த்தர் ஜெபத்தை கேட்டார், அடுத்த ஆண்டில் எனக்கு பெண் குழந்தை பிறக்கும்படி சர்வ வல்ல தேவன் கிருபை செய்தார். என் மகளுக்கு தற்பொழுது 6 வயதாகிறது. அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

– Sis. நிர்மலா, செகந்திராபாத்.

## இழந்த பார்வையை திரும்ப பெற்றேன்! பூரண சுகம் கிடைத்தது!



எனது வீட்டில் நான் வேலை பார்த்துக்கொண்டிருந்தப்பொழுது திடீரென மேலே அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு கனமான இரும்பு பாத்திரம் சரிந்து, எனது தலையின் மீது விழுந்ததினால் என் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. ஒரு கண்ணிலிருந்து இரத்தம் சொட்ட ஆரம்பித்தது. முகத்தின் ஒரு பக்கம் வீங்கிவிட்டது. உடனே மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். இருப்பினும் ஒரு கண்ணின் பார்வை முற்றிலும் போய்விட்டது. ஒவ்வொரு நாளும் வலி வேதனையோடு மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன்.

எனது நிலையை அறிந்த ஒரு சகோதரி விஜயவாடாவில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு என்னை அழைத்து வந்தார்கள். இயேசு கிறிஸ்து செய்யும் அற்புதங்களை குறித்தும் கூறினார்கள். எனக்குள் விசுவாசம் வந்தது. கூட்டம் முடிந்து தனி ஜெபத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள்

எனக்காக ஜெபித்து ஜெப எண்ணெயை கொடுத்து அதை ‘இயேசுவின் இரத்தம் ஜெயம்’ என்று கூறி கண்களில் பூசுமாறு கூறினார்கள். வீட்டிற்கு வந்த பிறகு, விசுவாசத்தோடு அந்த எண்ணெயை எனது கண்ணில் ஒரு சொட்டு விட்டேன், வீக்கம் உள்ள பகுதியில் எண்ணெயை பூசினேன். மறுநாள் காலை எழும்பும் பொழுது இரண்டு கண்களால் என்னால் நன்றாக பார்க்க முடிந்தது. தொடர்ந்து மூன்று நாளில் பரிபூரண சுகம் உண்டானது. எனக்கு கர்த்தர் செய்த அற்புதத்தை கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

# புது வீடு கட்டினோம்!



2024-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துக் கொண்டேன். கூட்டம் முடிந்து தனி ஜெப வேளையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள், அதன்பின் என்னைப் பார்த்து, நீங்கள் புது வீடு கட்டுவீர்கள் என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். அதன்படியே 2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நாங்கள் புது வீடு கட்டி குடியேற கர்த்தர் ஒத்தாசை செய்தார். அதற்காக கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

**- திரு. பிரான்சிஸ், சென்னை.**

# நெஞ்சு வலியிலிருந்து அற்புத விடுதலை




என் பெயர் ராஜு. எனக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு அரசு மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். தொடர்ந்து பல சிகிச்சைகள் செய்தும், பரிசோதனைகள் எடுக்கப்பட்டும் எந்த முன்னேற்றமும் இல்லாமல் படுக்கையில் இருந்தேன். இப்படியே ஒரு மாத காலம் கடந்துவிட்டது. அதன்பிறகு நான் வீட்டிற்கு செல்கிறேன் என சொல்லி மருத்துவமனையிலிருந்து நானாக கிளம்பி வந்துவிட்டேன். மனதில் அதிக பாரமாகவே இருந்தது. அந்த நேரத்தில் அருப்புக்கோட்டையில் மூன்று நாள் நற்செய்திக்கூட்டம் நடைபெற்றது. நானும் என் மனைவியும் கூட்டத்தில் கலந்துக்கொண்டோம். முதல் நாள் கூட்டத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள், இங்கு நெஞ்சு வலி வேதனையுடன் வந்திருக்கிற ஒரு நபரை கர்த்தர் சொஸ்தமாக்குகிறார் என என்னை பெயர் சொல்லி அழைத்தார்கள். நான் வேறு ஒருவரை அழைக்கிறார்கள் என அமைதியாக நின்றுக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஐயா என்னை குறிப்பிட்டு அழைத்து, எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். இந்த நாள் வரை நான் எந்த ஆப்ரேஷனும் செய்யவில்லை. நல்ல சுகத்துடன் இருக்கிறேன். அற்புத சுகத்தை தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன். தேவனுக்கே

மகிமை! ஐயாவிற்கு என்னுடைய நன்றியை தெரிவிக்கிறேன்.

**- Bro. ராஜீ, மதுரை.**

# ஏழைக்கு பெலன்!



நான் திருச்சியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு தவறாமல் வந்துக்கொண்டு இருக்கிறேன். கடந்த பிப்ரவரி மாதம் பிரஷர் அதிகமாகி சரீர பெலவீனத்துடன் கூட்டத்திற்கு வந்தேன். துணைக்கு யாரும் இல்லை. எப்படி கூட்டத்திற்கு சென்று வருவேன் என பயத்துடன் பஸ்ஸில் வந்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது அன்பரின் ஊழிய பத்திரிக்கை செய்தியை படிக்க ஆரம்பித்தேன். அதில் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள், கர்த்தர் ஏழைக்கு பெலனாயிருக்கிறார் (ஏசாயா 25:4) என்ற வசனத்தைக் குறித்து ஆழமான ஒரு தேவ செய்தியை எழுதியிருந்தார்கள். அதை படிக்கும்பொழுதே எனக்கு ஆறுதலாக இருந்தது. செய்தியை படித்து முடித்தவுடன் என்னுடைய பெலவீனம் எல்லாம் எங்கே போனது என்று தெரியவில்லை. புது பெலத் துடன் வந்து அன்றைய நாள் கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். என்னை சுகமாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

**- திரு. ஆபிரகாம்**

# தடை நீங்கி வெளிநாடு சென்றேன்



நான் வெளிநாட்டில் வேலை செய்துக் கொண்டிருந்தப்பொழுது விடுமுறையில் இந்தியாவிற்கு வந்தேன். என்னுடைய விசா அனுமதி முடிந்து விட்ட காரணத்தினால் மீண்டும் நான் பணிக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டு அதிக வருத்தத்துடன் இருந்தேன்.

அந்த நேரத்தில் செகந்திராபாத்தில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புதம் செய்தார். தேவ கிருபையால் எனக்கு விசா கிடைத்து நான் மீண்டும் வெளிநாடு செல்ல கர்த்தர் வாசல்களை திறந்தார். தடைகளை நீக்கி அற்புதம் செய்த கர்த்தரை துதிக்கிறேன்.

- திரு.நோபிள், செகந்திராபாத்.

Tamil WhatsApp No
+91 95004 87059

## பொருத்தனையோடு ஜெபித்தோம்!



திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக்கூட்டத்திற்கு நாங்கள் குடும்ப மாக வந்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தர் எங்களுக்கு அநேக அற்புதங்களை செய்துள்ளார். சமீபத்தில் என் அம்மாவிற்கு பிரஷர் அதிகமாகி மருத்துவமனையில் அட்மிட் செய்தோம். அனைத்து பரிசோதனைகளும் நார்மல் என வந்தது. ஆனால் பிரஷர் குறையவே இல்லை. அந்த நேரத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அங்கிள் அவர்களிடம் எங்கள் அம்மாவிற்காக ஜெபிக்கும்படி சொன்னோம். அங்கிள் ஜெபித்தார்கள். அதன் பிறகு பிரஷர் நார்மலுக்கு வரவும், நல்ல சுகத்துடன் வாழவும் கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை.

**- Bro. பால் ரெய்னர், திருச்சி.**

## அற்புத சுகம் கிடைத்தது

என் பேரனுக்கு சிறுநீர் போகும் இடத்தில் நோய் தொற்று ஏற்பட்டது. அதனால் ஆப்ரேஷன் செய்யவேண்டும் என மருத்துவர்கள் கூறினார்கள். அப்பொழுது தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு Dr.ஜேன் ஜாஷ்வா அவர்களிடம் பேரனுக்காக ஜெபிக்கும்படி சொன்னோம். ஒன்றும் பிரச்சனை இல்லை, ஆப்ரேஷன் இல்லாமல் இயேசு சுகமாக்குவார் என சொன்னார்கள். அதன்படி பேரனுக்கு ஆப்ரேஷன் செய்யாமலேயே நல்ல சுகத்துடன் இருக்கிறான். தேவனுக்கு மகிமை! என் பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியத்திற்கு தருகிறேன்.

**- Sis.கலையரசி, தூத்துக்குடி.**

## நுரையீரல் பிரச்சனை நீங்கியது!



2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் என்னுடைய நுரையீரலில் பிரச்சனை ஏற்பட்டு, தொடர் இருமல் வந்துக்கொண்டிருந்தது. இருமுவதற்கும் பெலன் இல்லாமல் ரொம்ப கஷ்டப்பட்டேன். இதற்காக பல மருத்துவர்களிடம் பரிசோதனைக்கு சென் றேன். பிரச்சனை நீங்கவே இல்லை. கடைசியாக அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு, திருமதி. மார்கிரேட் ஸ்திரா அம்மா அவர்களிடம் என் பிரச்சனையை சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். உடனே அம்மா பாரத்துடன் ஜெபித்தார்கள். நானும் பொருத்தனையோடு ஜெபித்தேன். கர்த்தர் இரங்கினார். இருமல் நின்றது. நல்ல சுகத்துடன் இருக்கிறேன். என்னை சுகமாக்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

**- திருமதி. ஜமுனா ராணி, விழுப்புரம்.**







English WhatsApp No: +91 94889 32937
Telugu WhatsApp No: +91 91770 87869

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை

அனுப்புவதற்கான எளிய வழிகள்

“இந்த
QR code–ஐ உங்கள்
செல்போனில் ஸ்கேன் செய்து
அல்லது
95004 87061 என்ற எண்
மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும்
செயலிகள்
மூலமாகவும் காணிக்கை
அனுப்பலாம்.”



மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)

Online Donation (Website) || Bank Account / QR Code

UPI / Google pay / Paytm / Phonepe

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்

10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

## வங்கிக் கணக்குகளின் விபரம்

**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**



**IFS Code: SBIN 0000930**


**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.

(10.00 AM - 6.00 PM)

# ஜஸ்டின் மார்ட்டையர்

1100 – 1167



இரண்டாம் நூற்றாண்டின் சிறந்த கிறிஸ்தவ தத்துவஞானி மற்றும் மறைசாட்சி ஆவார். சாமாரியாவில் பிறந்த இவர் கிரேக்கத் தத்துவங்களைப் பயின்ற பின் கிறிஸ்தவத்தைத் தழுவினார். உண்மையான தத்துவம் கிறிஸ்தவமே என துணிவுடன் வாதிட்டார்.

## ஆரம்ப காலம்

ஒரு நாள் உண்மையை அறியாதவராக, உள்ளத்தில் சமாதானம் அற்றவராக, உலக கவலைகள் நிறைந்தவராக, ஒரு கடற்கரையோரம் உலாவிக்கொண்டிருந்தார் ஜஸ்டின். உண்மையை அறிவிக்கும் ஒருவரை அவர் கண்கள் தேடியது. **'தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்' மத்தேயு7:7-ன்படி** ஒரு முதியவர் மெதுவாக இவரை நோக்கி வந்தார். கிறிஸ்துவின் இறப்பையும், உயிர்ப்பையும், அவர் தரும் விடுதலையையும், இரட்சிப்பின் நிச்சயத்தையும் தெளிவாக எடுத்துக்கூறினார். வேதாகமத்தின் சத்தியங்களை தேனைப் போல பருகினார் ஜஸ்டின். அவர் வாழ்வு மாற்றம் பெற்றது. மிகுந்த மகிழ்ச்சியோடு தன் வீடு சென்றார்.

## பணி வாழ்வு

130-ம் ஆண்டு ஞானஸ்நானம் பெற்ற இவர், கிரேக்க நாடு, எகிப்து, இத்தாலி போன்ற இடங்களுக்குச் சென்று கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்தார். கிறிஸ்துவைப் போல் வாழும் மாணவர்கள் அடங்கிய ஒரு பள்ளியை நிறுவினார். பல தத்துவ புத்தகங்களையும் எழுதினார். இவர் எழுதிய 'முதல் மன்னிப்பு (First Apology)' மற்றும் 'இரண்டாம் மன்னிப்பு (Second Apology)' ஆகியவை ரோமானிய அரசர்களுக்கு, கிறிஸ்தவர்கள் மீதான தவறான புரிதல்களை நீக்க எழுதிய கடிதங்கள் ஆகும். 'டிரைஃபோவுடன் உரையாடல்' (Dialogue with Trypho) என்ற நூலில் பழைய ஏற்பாட்டிற்கும் கிறிஸ்துவிற்கும் உள்ள தொடர்பை விளக்கினார்.

## சாட்சிய வாழ்வு

கிறிஸ்தவத்திற்கு எதிரான ரோமப் பேரரசன் இவரை பிடித்து சிறையில் அடைத்தான். ரோம அதிகாரி இவரை நோக்கி, "நீ இறந்ததும் மோட்சம் சேருவாய் என்றும், கடவுள் உனக்கு சன்மானம் கொடுப்பார் என்றும் நினைக்கிறாயா" என்றும் கேட்டான். அதற்கு ஜஸ்டின், "நினைக்கவில்லை, ஆனால் நிச்சயமாக நம்புகிறேன்" என்றார். இதனால் கோபமுற்ற அவ்வதிகாரி இவரை கொடூரமாக கொலை செய்ய ஆணையிட்டான். உண்மைக்காக, கிறிஸ்தவ நம்பிக்கைக்காக தன் தலையை கொடுத்தவர் புனித ஜஸ்டின்.

# உலக செய்திகள்



ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே மூண்டுள்ள போர் உலக நாடுகளைப் பெரும் அச்சத்தில் ஆழ்த்தி யுள்ள நிலையில் இந்த மோதலால் ஈரானின் கலாச்சார அடையாளங்கள் மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் கடுமை யான சேதத்தைச் சந்தித்து வருகின்றன. குறிப்பாக, யுனெஸ்கோ அமைப்பால் உலகப் பாரம்பரியச் சின்னமாக அங்கீக ரிக்கப்பட்ட தெஹ்ரானின் புகழ் பெற்ற கோலெஸ்தான் அரண்மனை, சமீபத்தில் வான்வழித் தாக்குதலில் சிதைக்கப்பட்டுள்ள செய்தி வரலாற்று ஆய்வாளர்களைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த அரண்மனை வெறும் கட்டிடமல்ல, இந்திய வரலாற்றோடு மிக நெருக்கமான தொடர்புடைய ஒரு பொக்கிஷமாகும். முகலாயப் பேரரசர் ஷாஜஹானால் உருவாக்கப்பட்ட உலகப்புகழ் பெற்ற மயிலாசனம், பாரசீகப் படையெடுப்பாளர் நாதிர்ஷாவால் டெல்லியிலிருந்து கொள்ளையடிக்கப்பட்டு இந்த அரண்மனையில்தான் வைக்கப்பட் டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அரண்மனையின் சிதைவு இந்தியர்களுக்கும் ஒரு வருத் தமான செய்தியாகவே அமைந்துள்ளது.

கலாச்சார அடையாளங்களை அழிப்பது ஒரு நாட்டின் ஆன்மாவை அழிப்பதற்குச் சமம் என்று ஈரான் குற்றம் சாட்டுகிறது. டெல்லியின் செங்கோட்டையைப் போலவே பழமையும் பெருமையும் வாய்ந்த கோலெஸ்தான் அரண்மனை இன்று புகை மண்டலமாகவும், இடிபாடுகளாகவும் காட்சியளிப்பது வரலாற்றை நேசிப்பவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது. மயிலாசனம் வீற்றிருந்த அந்த அரசவை இன்று ரத்தமும் தூசியும் படிந்து கிடப்பது காலத்தின் கோலமே தவிர வேறில்லை.

உலக வரலாற்றில் எத்தனையோ பேரரசுகள் தோன்றி மறைந்திருக்கலாம். ஆனால் ஒரு கடல் கடந்த பேரரசை உருவாக்கி, இந்தியப் பெருங்கடலையே தனது 'ஏரி' யாக மாற்றிய பெருமை சோழப் பேரரசிற்கு மட்டுமே உண்டு. பிற்காலச் சோழர்களின் எழுச்சி என்பது வெறும் போர்களால் ஆனது மட்டுமல்ல, அது ஒரு மிகப்பெரிய கடற்படைத் தொழில்நுட்பத்தின் வெற்றியாகும். குறிப்பாக முதலாம் ராஜராஜ சோழன் மற்றும் அவரது மகன் முதலாம் ராஜேந்திர சோழன் ஆகிய இருவரின் ஆட்சிக் காலத்தில், சோழர்களின் புலிக்கொடி வங்கக் கடலைத் தாண்டிச் சென்று இன்றைய இந்தோனேசியா, மலேசியா, இலங்கை மற்றும் மாலத்தீவுகள் வரை பறந்தது. ஒரு நிலப்பரப்பை ஆள்வதற்கே பெரும் உழைப்பு தேவைப்பட்ட அந்த காலத்தில், ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி இருந்த நாடுகளைத் தனது கடற்படையால் வென்றெடுத்த சோழர்களின் வீரம் உலகத் தற்காப்பு வரலாற்றில் ஒரு வியக்கத்தக்க அத்தியாயம் ஆகும்.

ராஜேந்திர சோழனின் 'கடாரம் கொண்டான்' என்ற பட்டம் சாதாரணமாக கிடைத்ததல்ல. இன்றைய மலேசியாவின் ஒரு பகுதியான ஸ்ரீவிஜயப் பேரரசை நோக்கி அவர் மேற்கொண்ட கடல் பயணம் உலக வரலாற்றின் நீண்ட தூரக் கடற்படைத் தாக்குதல்களில் (Longest Naval Expedition) ஒன்றாகக் கருதப்படுகிறது.

# We Are Hiring!!

## PRAYER WARRIORS

Language Known
English - Telugu
English - Malayalam

apply to: ministryofjesushr@gmail.com



Male / Female || Christians Preferred

# WANTED

## ACCOUNTANT

(B.Com. / M.Com. Graduates)
Candidates with Experience Preferred

ministryofjesushr@gmail.com





## CAMERA MEN / VIDEO EDITORS
## GRAPHIC DESIGNER

(Any UG/PG Candidates)

Skills Required :Able to work in Adobe Photoshop, Adobe Illustrator, CorelDraw, Adobe Premiere Pro & After Effects

**Male / Female, Christians Preferred**

**Apply to: ministryofjesushr@gmail.com**


திருச்சி
உயிர்ப்பு பண்டிகை ஆராதனை
ஏப்ரல்
05
ஞாயிறு
நேரம்: காலை 6:30
உயிர்ப்பு பண்டிகை ஆராதனையில
பரிசுத்த திருவிருந்து
ஆசரிக்கப்படும்
தேவ செய்தி: Rev. Dr. A. ஜாஷ்வா குடும்பத்தினர்
டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி-18
99421 66066 99446 66066


திருச்சியில்
அற்புத குடும்ப
ஆசீர்வாதக்கூட்டம்
ஏப்ரல்
25
(சனிக்கிழமை)
தேவ செய்தி :Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்
நேரம் : காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை
இடம்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு (80 அடி ரோடு) தில்லைநகர், திருச்சி.
தொடர்புக்கு : 94888 45627
0431- 2741925


விடுதலையின் ஆசீர்வாத
ஆராதனை
ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி
அபிஷேகம் நிறைந்த பாடல்கள், ஆவிக்குரிய தேவ செய்தி,
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்
எந்தவிதமான வேறுபாடுமின்றி அனைவரும்
இவ்வாராதனையில் பங்கு பெறலாம்.
டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, 80 அடி ரோடு தில்லைநகர், திருச்சி - 18
தொடர்புக்கு : 99421 66066

# அமலாபுரத்தில்
# நற்செய்திப் பெருவிழா

ஏப்ரல் (செவ்வாய், புதன், வியாழன்)

07 08 09

இடம்
ஸ்ரீவசம்செட்டி அத்யம் காரு மைதானம்
ஸ்ரீராம்புரம், அமலாபுரம், ஆந்திரா

**நேரம் : தினமும் மாலை 6 மணி**



Dr. ஆனந்த ஸ்திரா
Mr. ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா

தொடர்புக்கு : 99445 36343
Pastor Gabriel: 93987 19277, Pr.Elijah Paul: 73829 82127

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

ஏப்ரல்
14
(செவ்வாய்கிழமை அரசு விடுமுறை)

# சென்னையில்

இடம்
BKN Skidmore Hall A/C
ரித்தர்டன் ரோடு, வெப்பேரி, சென்னை

**காலை 9:30 மணி முதல்
மதியம் 2:00 மணி வரை**



தொடர்புக்கு9488845627, 0431-2741922

Dr. ஆனந்த ஸ்திரா & Dr. ஜேன் ஜாஷ்வா